சென்னைத் தபாலைப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அடு] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ௵ தை மீ உ அ உ வெள்ளிக்கிழமை (11-2-1972) [இலக்கம்

பேரர் செஞ்சம்

## உத்தமோத்தம மகாசிவராத்திரிக்கு உரிய அம்சங்கள்?

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திங்கள் மலர் 23 இதழ் 4 (10-3-1964) 232, 237 பக்கங்களில் சித்தாந்தவித்தகர் கயப்பாக்கம் திரு. க. சோமசுந்தரச்செட்டியார் "மகாசிவராத்திரி வரலாறு" என்ற பொருள்பற்றி அருங் கருத்துக்கள் அமைந்த கட்டுரை எழுதியிருந்தனர். அவ்வுரையில் சிவராத்திரி ஐவகைப்படும். (மகாசிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாதசிவராத்திரி என்று விளக்கிய பின், "மேலும் இச் சிவராத்திரியானது, (1) உத்தமோத்தமம், (2) உத்தமம் (3) மத்திமம் (4) அதமம் எனவும் பேசப்பெறும்.



தமிழ்ப் பெரியார் திரு. சோமசுந்தரச்செட்டியார்

(1) சூரியாஸ்தமனம் வரை திரயோதசி இருந்து பிறகு சதுர்த்தசி வந்து மறுநாள் பகல் வரையிருப்பின் அது உத்தமோத்தமம் எனப்பெறும்.

(2) சூர்யாஸ்தமனத்தின் பின் இரவில் 10 நாழிகைக்கு முன்னும் சதுர்த்தசி வந்தால் உத்தமம்.

(3) காலை தொடங்கி மறுநாள் உதயம்வரை சதுர்த்தசியாக இருந்தாலும் சூரியாஸ்தமனத்திற்கு முன் சதுர்த்தசி வந்தாலும் அன்றிரவு 10 நாழிகைக்குப் பின் சதுர்த்தசி வந்தாலும் மத்திமம்.

(4) இரவு 20 நாழிகை வரை சதுர்த்தசியிருந்து பிறகு அமாவாசை வந்தால் அதமம் என்பர்.

("திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு, சிவலிங்க ரூபம்") கூறினர்

மாசி மீ 1-ஆம் திகதி (13—2—72) ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி காலை 8-30 மணி வரைக்கும்
சதுர்த்தசி திங்கள் காலை 7-5. மணி வரை

மாசி மீ 30-ஆம் திகதி (13—3—72) திங்கட்கிழமை
திரயோதசி இரவு 9-04 மணி வரைக்கும்
சதுர்த்தசி செவ்வாய் இரவு 7-29 வரைக்கும்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

### அனுபூதி திருப்புகழ் (நுணசை)

மதனத்துறு மாயையி லுழலாதே
வசையிற்கடி காலனை யணுகாதே
பதமுத்திரை தேறிய நினைவாலே
பலனைப்பெறு மோர்சுக மருள்வாயே
முதலிற்பொரு ளோதென அயனுரை
முனிவிற்சிறை வாவென விடுவோனே
நுதலிற்பொறி யாறென வருமவேலா
நுணசைப்பதி மேவிய பெருமாளே.

—அளவையூர் "அருட்கவி" சீ. வி.

திருச்சிற்றம்பலம்

புக்கணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்கணைந்து நறுமலர்
கொய்திலர்
சொக்கணைந்த சுடரொளி
வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே.

திருநாவுக்கரசர்

### திருக்கேதீச்சர புகைவண்டி யாத்திரிகர் தொண்டர் சபை

மகா சிவராத்திரி விழாவையொட்டி திருக்கேதீச்சர புகைவண்டி யாத்திரிகர் சபை ரயில் மூலம் வரும் யாத்திரிகருக்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

12ம் திகதி முதல் 14ம் திகதி வரை மதவாச்சி திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலையங்களில் அடியார்களுக்கு பானங்கள் வழங்கப்படும்.

மதவாச்சி புகைவண்டி நிலையத்தில் 13ம் திகதி முற்பகல் சிற்றுண்டிகள் வழங்கப்படும். 14ம் திகதி திருக்கேதீச்சரம் புகையிரத நிலையத்துக்கண்மையில் சபையின் மடத்தில் அன்ன பானங்கள் வழங்கப்படும்.

### மாசி மக மகோற்சவம்

—0—

கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமக மகோற்சவம் இம் மாதம் 25ம் தேதி சிறப்புற நடைபெறவுள்ளது.

### யோகாசன வகுப்பு

யோகாசன வகுப்பு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வருகிறது. மட்டக்களப்பைச் சேர்ந்த சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகீஸ்வரா அவர்களால் இப் பயிற்சியளிக்கப்படுகிறது. தினமும் காலை மாலை வேளையில் நடைபெறும் பயிற்சியில் பலர் கலந்து கொள்கின்றனர். சுவாமிகள் இங்குள்ள சில பாடசாலைகள் கல்லூரிகளிலும் யோகாசனம்பற்றி விளக்கங்கள் கொடுத்து வருகின்றார்கள்.

### புதிய கல்வித் திட்டம்

புதியகல்வித்திட்டத்தை நாடு முழுதிலும் அமுல்நடத்துதற்கு ஆசிரியர்கள் தமது பூரண ஒத்துழைப்பை அளிக்கவேண்டுமென கொழும்பு மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்றைத் திறந்து வைத்துப் பேசிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் கூறினார்.

—:—

## கீதை கூறும் உபதேசம்

செல்வி உமாதேவி இளையதம்பி B. A. (Special, Cey)


பகவான் கிருஷ்ணர் பார்த்தனுக்கு இயம்பிய உபதேசமொழியே பகவத்கீதை என்னும் சாஸ்திரமாக உருவெடுத்தது. பழைய பெரும் இதிகாசமான மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்கும் இந்நூல் உலகினர் அனைவர்க்குமுரிய ஒரு பொது நூலாகவே விளங்குகின்றது. அர்ச்சுனனின் மனச்சலக்கத்தைத் தீர்க்கக் கிருஷ்ணர் அருளிய கீதை உலக மக்களுக்கு ஓர் மருந்தாகும். மக்கள் விருப்பு வெறுப்பின்றிப் பற்றற்றுத் தமது கடமைகளைச் செய்ய வேண்டுமென் பதே கீதை புகட்டும் உபதேசமாகும்.

பாரதப் போர் ஆரம்பமானதும் அர்ச்சுனனின் தேரோட்டியாக விளங்கிய கிருஷ்ணர் ரதத்தைக் கௌரவர் பாண்டவர் ஆகிய இருவருடைய படைகளுக்கு நடுவே நிறுத்துகின்றார். கௌரவர் பக்கத்தை நோக்கிய அர்ச்சுனனுடைய கண்களுக்கு உறவினர், நண்பர், பாட்டனார், ஆசிரியர் தென்படுகின்றனர். உடனே மனங்கலங்க இவர்களைக் கொன்று பெறும் இராச்சியத்தினால் என்ன பயனெனத் தடுமாறுகின்றான். அப்பொழுது கிருஷ்ண பகவான் அவனுக்கு அருள் கூர்ந்து குருவாய் நின்று உபதேசம் செய்கின்றார். அவ்வுபதேசமொழிகளே பகவத் கீதையாகும்.

உபநிடதத்தில் விளக்கப்பட்டுள்ள உண்மைப்பொருளினின்றும் தோன்றிய வாழ்க்கை நெறி யாது என்பதைக் கீதை விரிவாகக்கூறுகின்றது. அதாவது வாழ்க்கைத் தத்துவத்தைக் கீதை உபதேசிக்கிறது எனலாம். இடையறாச் சோதனைகள் நிரம்பியதே வாழ்க்கை; இச் சோதனைகளைத் தாங்க மனவலிமை வேண்டும். எனவே வலிமைபடைத்தவனே வாழ்வுக்குரியவன் எனக் கீதை கூறுகின்றது போர்க்களத்தில் பகவத் கீதை கிருஷ்ணரால் அருளப்பட்டதும் இத்

வளர்ச்சி 3-ம் பக்கம்

## பட்டமளிப்பு



இலங்கை இந்து சமய ஆலோசனைச்சபையாரால் அழைக்கப்பெற்ற மெய்கண்டாராதீன ஓதுவார் பண்ணிசை புலவர் ஸ்ரீ பி. ஏ. எஸ். இராசசேகரன் அவர்களிடம் நான்கு வருடங்கள் திருமுறைகளைப் பண்ணோடு பயின்று தேர்ச்சி பெற்ற சித்தன்கேணிச் செல்வன் க. சிவபாலனுக்கு 7-1-72 வெள்ளிக்கிழமை சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் தொண்டைமண்டல மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசம்தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "திருமுறைச் செல்வமணி" யென்ற பட்டமளிக்கப்பெற்றது. திருமுறைகளைப் பண்ணோடு பாடும் ஆற்றலைப் பெற்ற செல்வன் க. சிவபாலன் இப்பொழுது சித்தன்கேணியில் திருமுறைவகுப்பு நடத்தி வருகின்றார்.

மகாசந்நிதானம் அவர்கள் திருமுறைகளின் பெருமையைப் பற்றி பேசுகையில் திருமுறைகளே சைவசமயத்தின் உயிர்நாடி அவற்றை முறையோடு ஓதப் பழகிக் கொள்ளுதல் நற்பயனளிக்குமெனவும் கூறிச் செல்வன் சிவபாலனை ஆசீர்வதித்தார்.

### சிவராத்திரி அஞ்சல்

திருக்கேதீச்சரச் சிவராத்திரி விழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் வழமைபோல அஞ்சல் செய்யும்.

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

### எங்கள் அறிவித்தல்

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14-2-72 திங்கட்கிழமை இந்துசாதனம் அலுவலகத்திலும் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிலும் கருமமாற்றுவோருக்கு விடுமுறையாகும் என்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றேம். — அதிபர்.


திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது வரு தை மீ உஅ-வ வெள்ளிக்கிழமை [1972]


## என் கடன் பணிசெய்து கிடப்பதே

திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானிடம் கேட்கின்ற விண்ணப்பம் இது:

"திருக்கடம்பூர் திருக்கரக் கோயிலில் கடப்பமாலையையணிகின்ற முருகப்பெருமானைப்பெற்ற உமாதேவியாரை வாம பாகத்தில் கொண்டிருக்கின்ற பெருமானே! சிறியேனைத் தாங்குதல் உமதுகடன்; 'என்கடன் பணி செய்து கிடப்பதே.'"

உலகில் ஒவ்வொரு மனிதனும் பணிசெய்கின்றான்; ஆனால் பணியைச் செய்கின்ற முறையை அவன் புரிந்து செய்வானாகில் அச்செயலினால் அவன் நன்மை பெறக் கூடியதாக விருக்கும். நான் எனது என்னும் செருக்கற்று ஒருவன் கடமை புரிவானாகில் அச்செயலினால் அவன் நன்மை பெறுவான். ஆகாமியவினை உண்டாகாது. வினைகளின் பயன் அவனைப் பாதிக்க மாட்டாது.

நான் எனது என்னும் செருக்குடன் புரியப்படும் செயல்கள் இறைவனருளைப் பெறுவதற்குத் தடையாக விருக்கும்.

முன்னொரு காலத்தில் பிரமாவும் விஷ்ணுவும் தனித் தனி "நான் பெரிது, நான் பெரிது" என்று சண்டையிட்ட காலத்தில் சிவபெருமான் அவர்களிருவருக்கும் முன் ஒரு சோதிப் பிளம்பாகத் தோன்றினார். பிரமா விஷ்ணு ஆகியோர் அதன் முடியையும் அடியையும் காணப் பெறாது திரும்பி வந்து சிவனைப் பூசித்தகாலத்தில் சிவபெருமான அவர்களுககு அருள் புரிந்தார். அவர்களுக்கு நல்லறிவு வந்தது. பின் வருமாறு அவர்கள் துதிக்கலானார்கள்.

புந்தி மயங்கிப் பொருங்காலை யெம்முன்னிற்
செந்தழலின் மேனிகொடு சென்றருளித் தொல்லறிவு
தந்து நினையுணர்த்தித் தாக்கமரு நீக்கினையா
லெந்திரம்யா முன்னின் றியற்றுகின்றாய் நீயன்றே.

மனம் மருண்டு போர் செய்த காலத்தில் எமது முன்னிலையில் செம்மையாகிய அக்கினியின் வடிவமாகித் தோன்றியருளிப் பழைய நல்லறிவைத் தந்து தேவரீரையும் உணர்த்தி யுத்தத்தையும் தவிர்த்தருளினீர்' நாங்கள் வெறும் யந்திரங்கள். தேவரீரன்றே உள்ளே நின்று இயங்குமாறு இயக்குகின்றீர்.

நாம் நமது கருவி கரணங்களைச் சிவனுடைய சொத்தாகக் கருதி சிவனே நம்முள் நின்று நம்மையியக்குகின்றானென்ற உண்மையையுணர்தல் வேண்டுமென்பதே திருநாவுக்கரசு சுவாமிகளுடைய விண்ணப்பத்தின் நோக்கமாகும்.

'உன் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பதே கிருஷ்ண பகவான் அருச்சுனனுக்குச் செய்த உபதேசத்தின் சாரம். இவ்வுபதேசமும் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவாக்கும் அடிப்படையில் ஒரே கருத்தாகவேமைந்திருக்கின்றன.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற தொடரில் கிடப்பதே என்ற சொல்லில் ஆழமான கருத்துமைந்திருக்கின்றது. நான் என்ற முனைப்பு நீங்கித் தொண்டாற்றுவதையே அப்பதம் விளக்குகின்றது. உலகில் பணிபுரிவோருக்கு திருநாவுக்கரசு நாயனார் திருவாக்கு வழிகாட்டியாகவிருக்குக.

---

## கீரிமலை, நகுலேஸ்வர ஆலய
# இரத - தீர்த்தோற்சவம்

விரோதிகிருது வருஷம் தைத் திங்கள் 17ம் நாள் (31-1-72) திங்கட்கிழமை காலை துவஜாரோகண விழா ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாட்கள் அலங்கார விழாக்கள் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகின்றன. இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள், பகலும், இரவும் வந்து முசுகுந்தன் நளன், அருச்சுனன் முதலிய சக்கரவர்த்திகளாலும், நகுல முனிவராதியோராலும், மாருதபுரவல்லியாகிய இளவரசியாலும் தத்த மக் குற்ற பாவ விமோசனங்களைப் பெற்றுய்ந்த 'கண்டகி' தீர்த்தமாகிய புனித தீர்த்தத்தில் நீராடி, ஆலயத்திற்குச் சென்று, அன்புடன் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமியை மெய்யன்புடன் வணங்குபவர்களின் காட்சி கண்கொண்டமக்களுக்குப்பெரு விருந்தாகுமன்றோ!

இரதோற்சவம் ஞாயிறு பகல 12-00 மணிக்கு ஆரம்பமாகி, ஆலவட்டம் குடை, கொடி சாமரம் சகிதம், வேத ஒலி, தேவார பாராயண ஒலி, மேளவாத்திய இசை ஒலிக்க, அடியார்களின் "அரோகரா" ஒலி வானைத்துளைக்கவும் வெளிவீதியில் தேரோடும்காட்சி கற்பனைக்கெட்டாத ஒன்றாகத் திகழும். தேவர்களும் இக்காட்சியைக்கான வருவர்கள் என்பது ஐதீகம்.

மாலை 4 மணிக்கு சுவாமி தேரிலிருந்து பக்தர்கள் சூழவும், மலர்மழை சொரியவும், பன்னீர் முதலிய நன்னீர் சொரியவும், திருநடனத்துடன் யாதஸ்தானத்திற்குப் பெருமான் எழுந்தருளுவார். அன்று இரவு சைவமக்களுக்கு அதிமுக்கியமான இரவாகும். அரிபிரமாதிகளுக்கெட்டாத மூலமூர்த்தியை முழு இரவும் கணவிழித்து' நான்கு ஜாமமும் முறைப்படி பூசைபுரிந்து மறுநாள் அதிகாலை 4 மணிக்கு சுவாமியுடன் 'கண்டகி' தீர்த்தத்தில் தீர்த்தமாடி எழும் காட்சி அற்புதமாகவே இருக்கும். ஆடி அமாவாசைக்கு வரும மககள் கூட்டத்திலும் பார்க்க மகாசிவராத்திரியான இன்றுவரும் மககள் சமுத்திரம் அதிகம் என்றால் மிகையாகாது. நடுச்சாமத்தில் நடைபெறும் லிங்கோற்பவ பூசையும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் கர்ப்பூரத் திருவிழாவையும் கணடு மகிழ வேண்டிய காட்சிகளாகும். ஐந்நூறு அடியார்களுக்குமேல் கர்ப்பூரச் சட்டிகளுடன் செலலும் காட்சி கண்டுகளிக்க வேண்டியதே! ——

---

## வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின்
### வருடாந்தக் கூட்டத் தீர்மானங்கள்

வடமாநில சைவ இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 30-1-71 ஞாயிற்றுக்கிழமையன்று திரு. வை இரகுநாதமுதலியார் அவர்கள் தலைமையில் கூடியது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) மரவரியை நீக்கி நடைமுறைக்குக் கொண்டு வர முன்வந்தமைக்காக அரசாங்கத்திற்கு எமது மன்றம் மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்கின்றது.

(2) தவறணைமுறை அழுலுக்கு வருந்தினத்தைக் கொண்டாட வேண்டுமென எமது மன்றம் பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

(3) பதநீர் மூலம் பனங்கட்டி, சீனி என்பனவற்றை உற்பத்தியாக்கும் வகையில் பொது மக்களை ஈடுபடுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

(4) சைவசமய விரத கால நிர்ணய அட்டவணை ஒன்றை வெளியிட சைவ ஸ்தாபனங்கள் முன்வர வேண்டும்.

(5) திருவள்ளுவ நாயனாரது குருபூசை விழாவை, நாவலர் பெருமான் கருத்தின்படி மாசிமாத உத்திரத்தில் நடாத்த சகல சைவ ஸ்தாபனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றைக் கேட்டல்.

(6) வண் / நாவலர் மகா வித்தியாலயம் என இப்பொழுது அழைக்கப்பட்டுவரும் பாடசாலைக்கு, நாவலர் பெருமானால் இடப்பட்ட 'சைவப் பிரகாச வித்தியாசாலை' என்ற பெயரையும் இணைத்து நாவலர் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் என்ற பெயரைச் சூட்டி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்தல்.

(7) வானொலியில் புராண படன நிகழ்ச்சிகளைப்பரப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதை அறிந்து எமது மன்றம் பாராட்டுதலைத் தெரிவிக்கின்றது.

(8) ஆறுமுகநாவலர், வள்ளுவர் போன்ற பெருமக்களின் வாக்கியங்களை வானொலி மூலம் ஒலிபரப்புமாறு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாரைக் கேட்டல்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பெற்றனர். தலைவர்: திரு வை. இரகுநாத முதலியார், உப தலைவர்: திரு க. முருகேசு, கௌரவ செயலாளர்: திரு. வ சந்தசாமி, உபசெயலாளர்: பிரம்மஸ்ரீ சா. பஞ்சாட்சர ஐயர், பொருளாளர்: திரு. கா. இரகுநாதன்.

---

## லண்டன் மாநகரில் பொங்கல் விழா

லண்டன் தமிழ்ச் சங்கத்தினரால் (பதிவு செய்யப்பட்ட அலுவலகம், 7. பெக்ஸ்கில் லண்டன் 11) தைப்பொங்கல் விழா, இந்தியன் உவை. எம் சி. ஏ. மகாத்மா காந்தி மண்டபத்தில் ஜனவரி மாதம் 30ம் திகதியன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது இவ்விழா திருமதி தங்கரதினம் முத்துக்குமாரசுவாமி அவர்கள் 'தமிழ்த் தாய் வணக்கம்' கூறியதும் ஆரம்பமாகியது. பதில் தலைவர் திரு. ஜீ. ராஜரோஸ் அவர்கள் தலைமை வகித்து வரவேற்புரை கூறினார். அதன்பின் முன்னைநாள் தலைவர் திரு. லெ மெய்யப்பன் அவர்கள் சங்கத்தின் அன்றைய—இன்றைய நிலை பற்றி விளக்கம் கூறினார். "நாவலருக்கு அஞ்சலி" போன்ற பல நூல் ஆசிரியர் திரு. வை. முத்துக்குமாரசுவாமி B. A. அவர்கள் 'தைப் பொங்கல் — அதன் ஆதோற்றமும் தத்துவமும்' பற்றி சொற்பொழிவு ஆற்றினார். அதைத்தொடர்ந்து திரு. கே. ஆனந்தன் அவர்கள் 'பொங்கல் விழா' பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திருமதி பானுமதி சந்திரசேகரன் திருமதி உமாமூர்த்தி, திரு ஆர். அனந்த நாராயணன் ஆகியோர் தைப்பொங்கலைப் பற்றியும் பிறிது பொருள் பற்றியும் இசைவிருந்தளித்தனர்.

முன்னைநாள் இலங்கை வானொலி கலைஞர் திரு இ. சுதந்திரராசா (புல்லாங்குழல்) செல்வர்கள் கிரீதரன், முரளீதரன் இராசரத்தினம் சகோதரர்கள் (மிருதங்கம்) செல்வி சசிகலா பரம் தில்லைராஜா (வீணை) ஆகியோர்களின் வாத்தியக் கச்சேரியும், திருமதி ஜெயலட்சுமி கந்தையா அவர்களின் மாணவிகளாகிய செல்விகள்: புஷ்பா தில்லைவராஜினி சிவஜோதி. மதிமதி சுதர்சு மராசா ஆகியோரின் பரதநாட்டிய விருந்தும் இடம் பெற்றன.

பதில் செயலாளர் திரு கே. ரங்கநாதன் அவர்கள் நன்றி நவின்றனர். அன்றைய தினம் மகாத்மா காந்தி மறைந்த தினமாகையால் ஞாபகார்த்தமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தேப்ப வெப்ப நிலை மிகவும் குளிராக இருந்தும் ஏராளமான தமிழ் பெருமக்கள் விழாவுக்கு சமுகமளித்தனர். இடைவேளையில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

(நமது லண்டன் நிருபர்)

---

## அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

சென்னை சித்தாந்த வித்தகர் சையப்பாக்கம் திரு சோமசுந்தரம் செட்டியாருடைய அருமைப் பாரியார் திருமதி ஜகதாம்பாள் அவர்கள் தமது 70 ஆவது வயதில் 25-1-72 செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் சிவபதமடைந்தனர். அம்மையார் சிவனடிக்கன்பு பூண்டவர், ஈகை, இன்சொல், பதிபக்தி பொறை முதலிய பண்புகளுக்கு குறைவிடமாக வாழ்ந்தவர். கணவருடைய கடவுள் வழிபாட்டுக்கும் சைவசமயப் பணிக்கும் உறுதுணையாக வாழ்ந்தவர். இறுதிச் சடங்குகள் 9-2-72 புதன்கிழமை அமைந்தகரையில் நடந்துள்ளன, தாழ்வெனுந் தன்மையோடு சைவப்பணி புரிந்துவருகின்ற செட்டியாரவர்களுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் மற்றுஞ் சுற்றத்தவர்களும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நேயர் நெஞ்சம்

# ஜனநாயகமும் சோஷலிஸமும் சிவ ஞான நெறியே!

தமது பேச்சுக்குத் "தினகரன்" அளித்த பத்திரிகைத் தலைப்பே இதுவென்றும், இதைத் தாம் கொடுக்கவில்லை எனவும் வாதாடுகிறார் மகாவித்துவான் க. கணபதிப்பிள்ளை. எங்ஙனமாயினும் இப்பத்திரிகைத் தலைப்பு மிகப்பொருத்தமாகவே அமைந்துள்ளதெனப் பத்திரிகையாளரைப் போற்றாமல் போற்றுகிறார் ஆனால் இதே பத்திரிகைத்தலைப்பை அடியேன் இட்டதற்கு "பகுத்துணராத அன்டரொருவர் குறித்த வாக்கியம் அநுதாபத்திற்குரியது" எனக் கூறுகிறார். ஒரே தலைப்புக்கு இசையும், வசையும் வழங்கும் மகாவித்துவானின் மனப்போக்கு மாறுபாட்டத்தை நேயர்களே மட்டிட்டுக் கொள்ளுங்கள்.

அரசியல்ஞானம் பாசஞானமாகும். சிவஞானம் பதிஞானமாகும். இவற்றிற்குரிய நெறிகளும் இருவேறாகும். சத்காரியவாதம் என்னும் போர்வையில் இவை இரண்டும் ஒன்றேயென மகாவித்துவான் நிலைநாட்டுகிறார். அரசியல் ஞானம் நிலைபேறுடையதன்று அதன் நெறியும் அத்தகையதே! சனநாயகம், சர்வாதிகாரம், முடியாட்சி, குடியாட்சி என்பன யாவும் சக்கரம்போல் காலவெள்ளத்தில் சுழன்றுவருவன என்பதற்குச் சரித்திரமே சான்று பகரும். சிவஞான நெறி காலவெள்ளத்தால் தாக்குண்ணாது என்றும் ஒரு பெற்றித்தாய் நிலைபேறுடையது.

சத்காரியவாதம் முப்பொருள்களின் அநாதி இயல்பைக் குறிப்பதாகும். அது பாசப்பொருளுக்கும், பதிக்கும் சமத்துவம் காட்டுவதன்று. பாசப்பொருள் அசத்தாகும். பதியே சத்தாகும். சத்தின் எதிரில் அசத்து விளங்காது! சூரியனின் எதிரில் மின்மினி தோன்றாது. சிவஞானத்தெதிர் பாசஞானம் தோன்றுதல் எங்ஙனம்? யாவையுஞ் சூனியமாகும். சதசத்தாகிய ஆன்மா பாசத்தைச் சார்ந்து ஊன நடனம் புரிகின்றபோது பாசஞானம் பிறக்கிறது. அது பாசத்தைவிட்டுப் பதியைச் சார்ந்து ஞான நடனத்துத் திளைக்கின்றபோது, சிவஞானம் விளங்கப்பெறுகிறது. சிவஞானம் பிறப்பதில்லை அது என்றும் வியாபகமாய் உள்ளது மகாவித்துவானுடைய கலாவிதங்கள் யாவும் ஊனநடனத்தே உதிக்கின்றன ஒரே வேளையில் பாசஞானமும், பதிஞானமும் ஆன்மாவிடம் ஒருமித்துத்தோன்றா எனவே, பாசஞானத்துத் தடபுரண்டு தத்தளிக்கும் மகாவித்துவான் அரசியல் ஞானத் தொடர்பால் சிவஞானநெறியை விளக்க முற்படுதல் கானல் நீரை மொண்டு உண்மைச் சைவர்களின் சிரத்தைத் தாகத்தைத் தணிக்க நாடுதல்போலாகும்

பாசஞான அத்துவாக்களில் (நெறிகளில்) இருந்து நீங்குவதே சிவஞானநெறியாகும். சிவனுடைய கையிலிருக்கும் சூலாயுதம். வாமை, சேட்டை, ரௌத்திரி ஆகியவை திருவருட்சக்திகளைக் குறிப்பதாகும் திருவருட்சக்தியே பாசங்களின் அத்துவாக்களை அழித்து ஆன்மாவைச் சச்சித் ஆனந்த மயமாக்கவல்லது. ஆனால் மகாவித்துவான் அவர்களோ "நமது அரிய சமயம், சோஷலிச சனநாயகத் தொடர்பிலே சிவஞானத்தைக் காட்டாதா? என அடியேனுக்குச் சவால் விடுகிறார் சிவநேயச் செல்வர்களே! இந்த மகாவித்துவ சவால எப்படியிருக்கிறது? இது சவாலாக இல்லை; அரசியல் வாலாகவே உள்ளது. வதரியா அகங்காரத்தில் திளைத்துத் தோல் தடித்தால் என் செய்வது? முதலையின் தடித்த தோலில் சூலாயுதம் சுலபமாக ஏறுமா?

சிவவித்தியா தத்துவங்கள் உட்பட 36 தத்துவங்களின் நெறிகளை நீக்குவதே சிவஞான நெறியாகும். மெய்கண்டார் காட்டிய இந்தச் சைவ சித்தாந்த உண்மையை இனிமேலாகிலும் மகாவித்துவான உணர்ந்து, சொல் இழுக்குப்படாது பாசச் சார்புகெடச் சைவப்பிரசாரஞ் செய்வாராக!

நா. செல்லப்பா.
14, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 10-2-72

---

## யாழ்ப்பாணம், அரசினர் பெரியாஸ்பத்திரி ஞானவைரவர் கோவிலில் புனித கங்கா தீர்த்தப் சேர்க்கும் விழா

மேற்படி கோவில் சைவ மகாசபைத் தலைவர் திரு சிவ. உ. சோமசேகரம் M A அவர்களால் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட கங்கா தீர்த்தம் கோயில திருமஞ்சனக் கிணற்றில் மகா சிவராத்திரி தினமாகிய 13-2-72 ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணியளவில சேர்க்கப்பெறும். நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு சி. அருளம்பலம் அவர்களும் சமுகமாயிருப்பர்.

## சிவராத்திரி விழா

கோப்பாய் தெற்கு, கற்பக விநாயகர் ஆலயத்தில் வழமைபோல் மகா சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும் விசேஷ நிகழ்ச்சியாக: பிரம்மஸ்ரீ வைத்தியானந்த சர்மா அவர்களின் கதாப்பிரசங்கமும், ஸ்ரீ தயா கோஷ்டியாரின் வில்லுப்பாட்டும், திருவைந்தெழுத்துப் போட்டியும் இடம்பெறும்

---

திருத்தம்

28-1-72 இந்துசாதனத்தில் வெளிவந்த M B 11777-ஆம் இலக்க கோட்டுவிற்பனவு விளம்பரத்தில் விற்பனவுத் திகதி 1972-ம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி என்று இருப்பதை மார்ச் மாதம் 1ம் திகதி என்று திருத்தி வாசிக்கவும்.

---

# ஆங்கிலம் அவனிமொழி

[ திருக்கோணமலை திரு. மா. பீதாம்பரன் அவர்கள் ]

ஆங்கி லத்தின் அருமை அறிந்தர(சு)
சதுகட்டாய மொழியென் றுரைகிது;
ஆங்கிலத்தினை ஆய்மின்; அறிவுநூல்
ஆற்றல் பெற்றிட் டகிலநல் நூலெலாம்
அங்கை நெல்லி எனத்தெளிந் தன்னையாம்
அரிய செந்தமிழ்க் கல்வி வளம்பெற
எங்கும உள்ள எழிற்கலை யாவையும்
இம்மொ ழிக்கண் இலங்கிடச் செய்குவீர்.

ஆரி யத்தினில் உள்ளமெய் நூல்களும்
அகில லோகவிஞ் ஞானநன் னூல்களும்
சீரி லங்கிடும் செந்தமிழ் தன்னிலே
செய்மின் என்றனன் பாரதி முன்னைநாள்;
பாரில் எங்கும் பரந்திடும் இங்கிலீஸ்ப்
பாஷை தன்னிற் பெயர்த்திடு வீரெனில்,
ஏரி லங்கும இயல்இசை நாடகம்
எங்குமுள்ள மொழிஞரும் ஏற்பரால்

பண்டை நன்முறை பற்றிநம் பைந்தமிழ்ப்
பண்பை ஆய்ந்திட் டியலினைப் போற்றுமின்
மண்ட லத்து மொழிகளின் முன்னரே
வைய கத்தில் விளங்கிய மாண்பினை
கொண்ட செந்தமிழ் கோதில் திருமொழி
குறிப்ப தன்பும அறனுடன் பக்தியும்
கண்டி லும்மினிப் பாயகன் னித்தமிழ்
கற்று நீதி நெறிவழி நில்லுமின்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல: M. B. 11710

புங்குடுதீவைச் சேர்ந்த சவரி மரிசிலின் —வழக்காளி
எதிராக
41/23 யாழ்ப்பாணம், கந்தர்மடம், ஆத்திபுலத்தைச் சேர்ந்த
1 வல்லிபுர நல்லதம்பியும்
2 அவரின் மனைவி நாகம்மாவும் —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற M B 11710ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம் ஆண்டு பங்குனி மீ 23ம் திகதி (23—3—72) வியாழக்கிழமை மூற்பகல் 10-30 மணி தொடக்கம் என்னால் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் ரூபாய் 3950/- 6-12-1964 தொடக்கம் 24-7-1971 வரைக்கும் 2000/- ரூபாவிற்கு 18 வீத வட்டியும் 24—7—1971 தொடக்கம் இறக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 513 ரூபாய் 77 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட புங்குடுதீவுப் பிரிவைச் சேர்ந்த புங்குடுதீவு கிழக்கு 'கொட்டைக்காடு' என்று சொல்லப்படும் நிலப்பரப்பு 10ம் வான்பயிர் செய்பயிர்களும் அகல் அடங்கும். எல்லை கிழக்கு தாவீதுவின் மனைவி தோமை செல்வதி ஆகுசியினதும் ஏனைய பங்காளரினதும், கைம்பெண் ரீற்றுரூ வி. ரேமியாவினதும் ஏனையோரினதும் ஆதனம். எல்லை வடக்கு தெரு. எல்லை மேற்கு சன்ஜுவான் சூசையினதும் பங்காளரினதும் ஆதனம். எல்லை தெற்கு மைக்கேல மகள மாகிறட்டின் ஆதனம். இதடங்கிலும்.

"வடிவேல உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.
2-2-72

சி. ஆ. து. வடிவேலு, J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும
ஏலவிற்பனையாளரும்:
எம் 389 11—2—72

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம மாவட்டக் கோடு
வழ: இல. M. B. 8784

சிகவலிங்கம் கைம்பெண் நவமணி. உரும்பிராய் வடக்கு —வழக்காளி
எதிராக
அருணம்பலம் தருமலிங்கம் உரும்பிராய் வடக்கு —எதிராளி

யாழ்ப்பாண மாவட்டகோட்டின் M B 8784-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1972-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ம் திகதி (25-3-72) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால்விற்கப்படும்.

தீர்வைத்தொகை:
முதலும வட்டியுமாக ரூபா 6,080/- இன்னும் 3200/- ரூபாவிற்கு 26-1-67 தொடக்கம் 7-3-69 வரைக்கும் நூற்றிற்குப் பத்து வீத வட்டியுங் கூட்டிய தொகைக்கு 7-3-69 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்துவீத வட்டியுஞ் செலவு ரூபா 400-70 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய்க் கோவிற்பற்று உரும்பிராய் இறை 'இலுப்பையின்ற புலம்'' பா. நில இலா 7 குளிகள் 7, 7/8 இனறும் பயிர்களும் எல்லை கிழக்கு சேனகரட்ணம் புஸ்பதிருக்குலகாயகம் பெண் சிவஞானத்திற்குமுரியவாதனக்கள். வடக்கு பொன்னம்பலம் பெண் தையலம்மாவிற்குரியவாதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு இந்த ஈடு வைத்தவருக்குரிய வாதனம் இதடங்கலும்.

"அகிலகம்"
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். 8-2-72

தா க பொன்னுத்துரை J. P
கொமிஷனரும, விலமதப்பாளரும்
M 400- 11-2-72


---

## கீதை கூறும்

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

தத்துவத்தை உலகினர்க்குப் புகட்டும் நோக்கத்துடனேயாகும்.

உடலின் நிலையற்ற தன்மை, ஆன்மாவின் அழிவற்ற தன்மை, இறைவனின் இயல்பு, இவற்றிற்கிடையேயான தொடர்பு ஆகியவற்றைக் கீதை தெளிவாக விளக்கி மனிதன் ஆன்ம ஈடேற்றததின் பொருட்டுக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை உபதேசிக்கின்றது, மனிதனை உலகில் நிறைமனிதனாக வாழ வழி வகுப்பதே கீதா உபதேச சாரமாகும்.

இவ்வுலகில் எண்ணிறந்த ஜீவன்கள் இறைவனால் படைக்கப்பட்டுள்ளன. அவ்வான்மாக்கள் தம் ஆயுட்காலம்முடிந்ததும் தம்உடலை நீத்து வேறு உடலைத் தாங்குகின்றன. எனவே இறத்தலும் பிறத்தலும் உலகில் நிகழும் சாதாரண நிகழ்ச்சி; இவ்விதம் இறப்பு நடைபெறும பொழுது உடல் அழிகின்றதே அன்றி ஆன்மா அழிவதில்லை; ஆன்மா அழிவற்றது. இதனைக் கிருஷ்ணர் பின்வருமாறு அர்ச்சுனனுக்கு உபதேசிக்கின்றார். "இவ்வாத்மா ஒருபொழுதும பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை, இது இல்லாதிருந்து பிறந்து பிறந்ததல்ல. இது பிறவாதது; இறவாதது; தேயாதது; வளராதது. காயம் கொல்லப்படுமிடத்தும் ஆன்மா கொல்லப்படுவதில்லை." எனவே நீ போர் புரிந்து பகைவரைக் கொல்வதற்கு வருந்தாதே.

மேலும் பல உதாரணங்கள் மூலம் கிருஷ்ணர் ஆன்மாவின சனாதன நிலையை அர்ச்சுனனுக்கு எடுத்தியம்புகின்றார் "பழுதுபட்ட துணிகளைக் களைந்து விட்டு மனிதன் எவ்வாறு புதியவைகளைப் போட்டுக்கொள்கிறானோ அவ்வாறே ஆன்மாவும் பழைய உடலங்களை, நீத்துப் புதியன புகுகிறது." "இவ்வாத்மா பொறிகளுக்குத் தென்படாதவன் சிந்தனைக்கு எட்டாதவன். மாறுபடாதவன்; எனவே ஆன்மாவை இங்ஙனம அறிந்து துன்பத்தை அகற்றுவாயாக. ஒருவேளை இவ்வாத்மா என்றும பிறந்து என்றும் இறக்கிறதென்று எண்ணுவாயானால் அப்பொழுதும நீ அவன் பொருட்டு வருந்துதல் பொருந்தாது. பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் பிறப்பதும் உறுதியென விலக்கமுடியாத விஷயத்தில் நீ வருந்துதல் பொருத்தமாகாது." "பாரதா, உடல்கள் அனைத்திலும உறைகின்ற ஆத்மா என்றும் வதைக்கப்படாதவன். ஆகையால் உயிர்களின் பொருட்டு நீ வருந்துதல் வேண்டாம்."

அடுத்து வாழ்க்கையின் மர்மத்தை அறிவுறுத்தும் பிரபஞ்சத் தத்துவம் கீதையில் தெளிவாக உபதேசிக்கப்பட்டுள்ளது. ஸ்தாவர ஜங்கமம் நிறைந்ததே இப்பிரபஞ்சமாகும்: இவை யாவற்றுள்ளும் நீக்கமற நிறைந்து நிற்பவன் இறைவனாகும். உலகைப் படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனும் அவனே. பகவானால் நேரிற்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## அணிந்துரை அரங்கம்

### — திரு ச. — அருணாசலம்

எழுதியவர்:
திரு. சி. கணபதிப்பிள்ளையவர் அவர்கள்
அல்வாய் வாசர். வல்லைச் சிவகுருநாத வித்தியாசாலை முன்னாள் அதிபர்.

அச்சுப் பதிப்பு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

கிடைக்குமிடம்:
அ. சிவபாதம், தங்கோடை, காரைநகர்

19ம் நூற்றாண்டில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தோன்றி பிற மதத்தவர்களால் நலிவடைந்த சைவ சமயத்தைப் பாதுகாத்தனர். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவசமய வளர்ச்சிக்கு அரிய தொண்டு புரிந்தவர்களுக்குள் ஒருவர் காரைநகர் திரு. ச. அருணாசல உபாத்தியாயர் அவர்களாவர். மாணவர் சைவசமயப் பண்புகளைப் பின்பற்றிக் கல்வி பயில வேண்டுமென அயராது பசி நோக்காது, கண் துஞ்சாது தமது சொந்தப் பொருளையும் உழைப்பையும் தியாகஞ் செய்து உழைத்தவர். கோப்பாய் இலிய போதனா பாடசாலை தோன்றுவதற்கு அவர் மூலகாரணமாக உள்ளவர். அவருடைய ஊக்கத்தினாலே பல தகுதியுள்ள ஆசிரியர்கள் அப் போதனாசாலையில் கல்வி பயின்றார்கள். இந்நூலாசிரியர் அவர்களுள் ஒருவர்.

“யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆசிரிய கலாசாலைக்கு மூதற்காரணம் ச. அருணாசலமே” என நல்லூர் சைவப் பெரியார் த. கைலாசபிள்ளை தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளமையே அருணாசல உபாத்தியாயருடைய சேவைக்குச் சிறந்த நற்சான்றாகும்.

இந்நூலுக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ‘யாழ்ப்பாணத்து மூன்று சமயங்கள்’ என்ற மகுடத்துடன் ஓர் நீண்ட அணிந்துரை வழங்கியுள்ளார். நாவலர், அருணாசலம், ஆசாரத்தனம் என்னும் மூன்றுமே அச்சமயங்களாவர். திரு. அ. தியாகராசா M. A. M. Litt. வட்டுக்கோட்டை பா. உ., திரு. க. ஜெயக்கொடி உடுப்பிட்டி பா. உ., புங்குடுதீவு திரு. இ. சதாசிவம்பிள்ளை, கரம்பிட்டி திரு. சு. ஏ. சின்னையா ஆகியோரும் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். திரு. அருணாசல உபாத்தியாயருடைய பிறப்பு, ஆலயக்கல்வி, காரைநகரில் வித்தியாசாலைகளைத் தாபித்தல், பிற ஊர்களில் கல்விப் பணி முதலியன இந்நூலின் அங்கங்களாகக் கொள்ளுவன. நூல் முடிவில் “என் தந்தையார்” என்ற தலைப்பில் திரு. அருணாசல உபாத்தியாயருடைய குமாரன் திரு. அ. சிவபாதம் அவர்கள் தமது தந்தையாருடைய வாழ்க்கையின் சிறப்பைப்பற்றி எழுதிய நீண்ட கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. திரு. அருணாசல உபாத்தியாயரை நினைவு கூரவும் பிற சந்ததியார் அவருடைய வாழ்க்கைப் பண்புகளை அறிந்து ஒழுகவும் இந்நூல் ஒரு சிறந்த கருவியாகும். இந்நூல் விற்பனையால் பெறும் நிதி காரைநகர் சைவமகாசபைக்குச் சேர்க்கப்படும்.

—

### நாவலர் நல்வாக்கு

தரித்திரனாய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனாய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று.

—

## கீதை கூறும் உபதேசம்

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

சொல்லப்பட்டதாக அமைந்திருக்கும் கீதையில் ‘நான்,’ என்பதெல்லாம் கடவுட்டத்துவமாகும். இதனைக் கிருஷ்ணர் பலவாறு அர்ச்சுனனுக்கு அருளுகின்றார்,

“உலகம் முழுவதும் என்னிலிருந்து உண்டாகிறது. நானே உலகம் முழுவதன் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணம். எனக்கு மேலானது வேறு எதுவும் இல்லை. நூலிலே மணிகள் போன்று இவை யாவும் என் மீது கோக்கப்பட்டிருக்கின்றன. அவ்யக்த வடிவமாய் நானே இவ்வுலகம் முழுமையும் பரந்து நிற்கிறேன், என்னில் பூதங்கள் எல்லாம் நிலைபெற்றிருக்கின்றன. நானே அவைகளுக்கு ஆதாரம். அவை எனக்கு ஆதாரம் அல்ல, என் ஆட்சி விசித்திரத்தைப் பார் உயிர்கள் உண்டாவதனைத்தும் என்னால்; உயிர்களைத் தாங்குவதும் நானே, ஆயினும் உயிர்களினின்று விலகி நிற்கிறேன. உயிர்கள் எனைப் பற்றி நிற்பது அவைகளுக்குத் தெரியாது. என் மேற்பார்வையில் சராசர உலகங்களைப் பிரகிருதி படைக்கிறது. இக்காரணத்தால் உலகமானது சுழலுகிறது” எனவே அனைத்திற்கும் காரணமான இறைவனிடம் மக்கள் அன்பு செலுத்தவேண்டுமென்பதே கீதையின் உபதேசம்.

ஆன்மா ஓர் உடலைவிட்டு வெளியேறும்போது அவ்வுடலில் தான் அடைந்த குணங்களை உடன்கொண்டு ஒரு புது உடலில் பிரவேசிக்கின்றது. காற்று ஒரு தோட்டத்தின் வழி வீசும்போது அவ்விடத்திலுள்ள வாசனைகளை எடுத்துக் கொண்டு வெளிச் செல்வதுபோல், ஆன்மாவும் தான் எடுத்த ஜன்மத்தின் கன்மங்களைப் (பாவபுண்ணியங்களை) சூட்சும உருவத்திற் கொண்டு செல்கிறது. எனவே ஒரு ஜீவனின் பரிணாமம் அதன் செய்கையிலேயே இருக்கிறது. ஜீவன் நற்செயல் செய்யும்பொழுது மேன்மையும் தீய கருமம் செய்யும்பொழுது கீழ்மையும் அடைகின்றது. எனவே மக்கள் ஆன்ம ஈடேற்றம் அடைய முயலவேண்டும். அதற்குரிய வழியாக யோகத்தைக் கீதை உபதேசிக்கின்றது.

வாழ்க்கையின் தத்துவங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகவே யோகம் என்று பெயர். யோகம் கூறும் கீதை பலவேறு வகைப்பட்ட யோகங்களை ஆன்ம சாதனமாகக் கூறுகின்றது அவற்றுள் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகியவை முக்கியம் பெற்றவை,

சர்மயோகம் என்பது காரியத்தைப் பற்றற்றுச் சிறப்பாகவும் திறமையுடனும் செய்வது. எக்காரியத்தைச் செய்வது என்று சிந்தித்தோமானால் நமது கடமைகளைப் பற்றற்றுக் கட்டாயமாகச் செய்யவேண்டுமெனக் கீதை கூறுவதை நாம் உணரலாம்.

உலக வாழ்க்கையை நன்கு கவனித்துச் செய்யப்பட்ட கருமோபதேசமே பகவத் கீதையாதலின் வாழ்க்கைக்கு வேண்டிய கருமங்களை நடத்தியே தருமத்தில் நிற்கலாம் என்ற உண்மையைக் கீதை கர்மயோகப் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறது. பற்றற்றுக் கடமையைச் செய்யப்பழகிக்கொண்டவன் யோகத்தில் மேலே ஏற வேண்டிய படிபடிகளில் செல்லும் சக்தியை விரைவில் அடைவான் அவன் பயனாக அனைத்தும் பகவான் திருவுள்ளத்தில் நிற்பதையும் காண்பான். சுயநலப் பற்று அறுந்த பின் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது ஆத்மாவைக் கரும பந்தத்திற் கட்டாது.

மேலும் உலக நன்மையைக் கருதி நாம் உலக காரியங்களைச் செய்தே தீரவேண்டும் எனக் கீதை கூறுகிறது. அதனைப்பின்வருமாறு கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கின்றார். “ஜனகர் முதலியவர்கள் கர்மத்தாலேயே முத்தியடைந்தார்கள் உலகத்தை நலவழியில் நடாத்துதலை நன்குணர்ந்தாவது கர்மஞ் செய்யக் கடப்பாடுடையவனாயிருக்க வேண்டும்”, பயனைக் கருதாது செய்யும் கர்மயோகியின் காரியம் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் பெரு நன்மை விளைவிக்கின்றது. ஏனெனில் அக்காரியம் சமூகத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைவதோடு, கர்மயோகியின் உடலும், அறிவும் ஒளிபெற்று விளங்கக் காரணமாக அமைகின்றது. எனவே கர்மயோகி ஓர் வியவசாயியாயிருந்தால்தன் தொழிலைச் சீர்படச் செய்வான் ஆசிரியன் ஆகவிருந்தாற் சிறந்த ஆசிரியனாக விளங்குவான். எனவே கர்மயோகி எத்தொழிலைச் செய்தாலும் திறமைமிக்க மனிதனாக விளங்குவான். “பார்த்தா, மூவுலகிலும் எனக்குக் கடமை ஒன்றும் கிடையாது அடையாத ஒன்றை இனி அடைந்தாகவேண்டும் என்பதும் இல்லவே இல்லை. ஆயினும் நான் கர்மம் செய்துகொண்டே இருக்கிறேன்” எனக் கிருஷ்ணர் கர்மயோகச் சிறப்பை எடுத்தியம்புகின்றார்.

ஆன்ம சாதனமாகக் கர்மயோகத்தை முதலில் உபதேசித்த கீதை அடுத்துப் பக்தி யோகத்தைக் கூறுகின்றது சித்தத்தை இறைவன் பால் வைக்கும் பக்தியோகமே விரைவில் பயனளிக்குமெனக் கீதையில் பின்வருமாறு கிருஷ்ணர் கூறுகிறார். “எப்போதும் மனமகிழ்ச்சியுடையவனாய், என்னிடத்திலேயே மனத்தையும், புத்தியையும் அர்ப்பணம் செய்த யோகி என் பக்தன்; எனக்கு இனியவன்.” “என்னிடத்து மனதை வைத்து யோகத்தில் நிலைத்தவராய், பெருஞ் சிரத்தையுடையவராய் யார் என்னை உபாசிக்கின்றார்களோ அவர்கள் யோகத்தில் மேம்பட்டவர்கள் என்பது; கருத்து”

மக்கள் ஆண்டவனை அடைய ஞானயோகம் சிறந்த வழியாகும் எனக் கீதை இயம்புகின்றது ஞானயோகம் ஆன்ம ஈடேற்றத்தை விரைவில் அளிக்கும் என்பதைக் கிருஷ்ணர் பின்வருமாறு அர்ச்சுனனுக்கு உபதேசிக்கின்றார், “மக்களுள் இடையறா யோகம் பூண்டவராக பக்தி பண்ணும் ஞானி மேலானவன்; ஏனென்றால் நான் ஞானிக்கு மிகப் பிரியமானவன்; அவனும் எனக்குப் பிரியமானவன்.”

‘ஞானி என் ஆத்மசொரூபமே என்பது என் கருத்து. ஏனென்றால் யோகத்தில் நிலைத்திருப்பவனாகிய அவன் மிக உத்தம கதியாகிய என்னையே கடைப்பிடித்திருக்கிறான்.” பல பிறவிகளுக்குப் பிறகே “யாவும் வாசுதேவ சொரூபம்’ என்று ஞானி என்னை வணங்கி வந்தடைகிறான். அத்தகைய மகாத்மா கிடைத்தற்கரியவன்.”

(வளரும்)

—

## திருக்குறள் THE GREAT KURAL

### பாயிரவியல் Introduction

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச சூரசங்காரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள ‘திருக்குறள் உரைக்கோத்து’ என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. —ஆசிரியர்]

அதிகாரம் I கடவுள் வாழ்த்து

குறள் (7) (முற்றொடர்— 7)

**தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது**

தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனது திருவடிகளை அடைந்தவர்களுக்கல்லாது மற்றவர்களுக்கு மனக்கவலைகளைப் போக்கிக் கொள்வது முடியாது.

Only those who have surrendered themselves to the Holy Feet of Him, who is incomparable, can escape from sorrow.

தனக்குவமையில்லாதான் என்றதனால் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பது பெறப்பட்டது.

குறள் 8) **அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.**

(1) அறக் கடலாகிய அருட்கடவுளுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்க்கல்லது உலக இன்பங்களாகிய பிற கடல்களை நீந்திக் கரைசேர முடியாது

(1) None except those who have surrendered themselves to the Holy Feet of the gracious Being, the Ocean of Righteousnes, can traverse the other seas of pain-giving worldly attachments:

( ) அறக்கடலாகிய அழகிய அருட்கடவுளது பாதங்களாகிய மரக்கலத்தை அடைந்தவர்க்கல்லாமல் மற்றவர்களுக்கு அறத்தின் வேறாகிய பொருள் இன்பக் கடல்களைக் கடத்தல் முடியாது.

(1) The raft which alone can take one across the stormy seas of wealth and sense delights is the Feet of the Fair gracious god, the sea of Dharma. It is impossible to traverse such seas except to those who earnestly cling to such a raft.

அறவாழி என்பதற்குத் தருமசக்கரம் என்று பொருள் கண்பாரும் உளர் பிறவாழி என்பதற்குப் பிற உரைகளை: பாவக் கடல்; பிறவிக்கடல்; பொருட்பற்று, இன்பப்பற்று என்னும் பிற கடல்கள்; அறங்களுக்கு மாறான மறம் எனப்படுகின்ற துன்ப சமுத்திரம்; (அத்தன்மை பொருந்தப் பெறுக) இல்லறத்துறவற சமுத்திரங்கள். அந்தணன் - அருளுடையவன்.

(வளரும்)

—

## உத்தமோத்தம மகாசிவராத்திரி

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

‘ஞான சம்பந்தத்தின்’ சமய ஞானப் பெருமை அறிந்தவர்களும், கயப்பாக்கம் சைவ சித்தாந்த வித்தகர் உயர்திரு க. சோமசுந்தரம் செட்டியாரின் கல்வி அறிவுச் செல்வத்தை அறிந்தவர்களும் மேற் கூறப்பெற்ற தராதரம் மாசி முதலாவது நாள் (ஞாயிற்றுக்கிழமை, மாசி விரோதிகிருது.) மாசி முப்பதாவது நாள் (திங்கட்கிழமை) ஆகிய நாட்களில் எதற்கு உத்தமோத்தமமாயமையும் என்பதை நோக்குவார்களாக.

5-2-72. “சைவாபிமானி”

—

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 11—2—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்